**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.10
https://ngmtamil.in/

# பண்டையத் தமிழர் வழிபாடுகள்

**க.வித்யா,**

முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), (பதிவு எண்: 2521128012008)

தமிழ்த்துறை, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை – 627 002.

இணைவு: மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி.

**முனைவர். தா. ஷமிலா ஜோஸ்டர்,**

நெறியாளர், தமிழ்த்துறை, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை – 627 002.

இணைவு: மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி.

மின்னஞ்சல் : vidhyavidhya532@gmail.com, அலைபேசி : 6374965011.

**முன்னுரை**

மனிதன் தோன்றிய காலத்திலேயே வழிபாடு என்பது தோன்றிவிட்டது எனலாம். மனிதனின் பயத்தின் வெளிப்பாடே வழிபாடாக தோன்றியது. மனிதனின் நாகரிக வளர்ச்சிக்கேற்ப ஒவ்வொரு நிலையிலும் வழிபாடுகள் மாறின. இன்றைய காலகட்டத்தில் இருக்கின்ற வழிபாட்டு முறையின் வளர்ச்சியை அடைய பண்டைய காலம் முதல் மனிதர்கள் நடத்திய வழிபாட்டு முறைகள் குறித்து இக்கட்டுரையில் விரிவாக காண்போம்.

**ஆய்வு நோக்கம்**

பழங்காலத்தில் நாகரிக வாழ்வு தோன்றுவதற்கு முன்னர் மக்கள் குழுவினராக, இயற்கையைச் சார்ந்து வாழ்ந்த காலத்திலேயே அவர்களிடம் வழிபாடு தோன்றிவிட்டது. இயற்கையின் பெருங்கருணையையும், பேராற்றலையும் கண்ட பின்னர் இயற்கை வழிபாடு தோன்றியது. வீரமரணம் அடைந்த தம் இனத்தவருக்கு நடுகல் நட்டுத் தெய்வமாக வழிபட்டனர். காலப்போக்கில் திணைசார் தெய்வ வழிபாடு தோன்றியது. கருப்பொருள்களில் 'தெய்வம்' முதலிடத்தைப் பெற்றது. பல்வேறு சமயங்களும், சமயம் சார்ந்த தெய்வ வழிபாடுகளும் பிற்காலத்தில் தோன்றின. காலந்தோறும் வளர்ந்து வந்த இவ்வழிபாடுகளே நன்கு நாகரிகமடைந்த பெருந்தெய்வ வழிபாடுகளாக இன்றும் தொடர்கின்றன. பண்டையத் தமிழர்களின் வழிபாட்டு முறைகளான இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு, இன்றைய தெய்வ வழிபாடுகள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

நிலம், நீர், தீ, காற்று, விசும்பு, நடுகல், உருவ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**ஆய்வுச் சுருக்கம்**

பழந்தமிழர்கள் முதன் முதலில் இயற்கையை வழிபட்டனர். இயற்கையினால் ஏற்படும் அழிவுகளையும், அதன் சீற்றத்தையும் கண்டு மனிதன் பயந்தான் பயத்தின் காரணமாகவே மனிதன் முதலில் அதனை வணங்கினான். பின்னர், அதன் பயன்களைக் கருதி இயற்கையை வழிபட்டான். இதனையடுத்து, மக்கள் அதிகம் மதித்த மனிதப் பண்புகளுள் வீரமே தலைச்சிறந்த பண்பாகக் கருதப்பட்டது. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரனுக்கு நடுகல் நட்டு, வீரனின் உருவமும், பெயரும் கல்லில் பொறிக்கப்பட்டு வழிபாடு செய்தனர். இதன் வளர்ச்சியே உருவ வழிபாடாக தோன்றியது எனலாம். பண்டையத் தமிழரின் வழிபாடுகள் குறித்து இங்கு காண்போம்.

**இயற்கை வழிபாடு**

இயற்கையின் கூறுகளான நிலம், தீ, நீர், காற்று, ஆகாயம், மலை, ஞாயிறு, திங்கள் போன்ற இயற்கைப் பொருள்களை வழிபடும் தன்மையே இயற்கை வழிபாடு என்பர். நிலம், தீ, தீர், வளி, ஆகாயம் இவை ஐந்தும் இயற்கையின் கூறுகளாகும். இதனைத் தொல்காப்பியம்,

**"நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**
**இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்**
**திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்" 1**

என்று சுட்டுகிறது. இக்கூறுகளை மனிதர்கள் தம் சூழ்நிலைக்கேற்ப வழிபடத் தொடங்குகின்றார்கள். இவ்வழிபாட்டின் நீட்சியே ஐம்பூத வழிபாடாகும். பழந்தமிழர்கள் ஐம்பூதங்களோடு, மலை, கடல், ஞாயிறு, திங்கள் ஆகியவற்றை வழிபட்டமையைத் தொல்காப்பியர், புறத்திணைகளில் ஒன்றான பாடாண் திணையில் கூறியுள்ளார். குறவன் மழைவேண்டிக் கடவுளை வழிபட்டபோது, மேகம் மிகுதியான மழையைப் பொழிந்ததாக ஐங்குறுநூறு குறிப்பிடுகிறது.

**"குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி**
**நுண்பல் அழிதுளி பொழியும் நாட"2**

மழைக்குக் காரணமான மரங்களையும் தெய்வமாக வழிபட்டுள்ளனர்.

**"கடவுள் முதுமரம்"3**

**"தொன்றுரை கடவுள் சேர்ந்த**
**பராரை மன்றப் பெண்ணை"4** இன்றைய திருக்கோயில்களில் காணப்படும் தலமரங்கள் பண்டைய மரவழிபாட்டின் எச்சங்களாகக் கருதப்படுகின்றன.

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய, தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தின் வாழ்த்துப் பகுதியில் திங்கள், ஞாயிறு, மழை ஆகியவை போற்றப்பட்டுள்ளமை இங்குச் சிந்திக்கத்தக்கது. இவை பண்டைய இயற்கை வழிபாட்டின் தொடர்ச்சியாக அமைந்துள்ளன.

**"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
**கொங்கலர் தார்ச் சென்னி குளிர்வெண்குடை போன்றிவ்**
**வங்கணுலகளித்தலான்.**
**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**காவிரி நாடன்றிகிரிபோற் பொற்கோட்டு**
**மேருவலந்திரிதலான்,**
**மாமழைப் போற்றுதும் மாமழைப் போற்றுதும்**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**………………………………………………………" 5** என்று சிலப்பதிகாரம் இயற்கை வழிபாடு பற்றிக் கூறுகிறது.

**நடுகல் வழிபாடு**

நடுகல் என்பது இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக்கல் ஆகும். இவற்றை வீரக்கற்கள் என்றும் கூறுவர். உலகின் பல பகுதிகளிலும் பெருங்கற்காலம் முதலே இவ்வழக்கம் இருந்து வந்துள்ளது. வீரர்களுக்காக எடுக்கப்படும் நினைவுக்கற்களை மக்கள் வணங்கி வந்தமை பற்றியும் பண்டைக்கால இலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. நடுகற்களை மக்கள் கடவுளாக வழிபட்டதனை, புறநானூறு,

**"அடலருந் துப்பின் …………………**

**……………………………………………………**

**நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே" 6** என்று சுட்டுகிறது.

**மரத்தின் கீழ் இறைவன்**

வீரக்கற்கள் பெரும்பாலும் மரங்களுக்குக் கீழ் நடப்பட்டுள்ளன. வீரக்கல்லில் இருக்கும் வீரன் நிழலில் இருக்க வேண்டும் எண்ணம் இதற்குரிய காரணமாகும். இதனைப் புறநானூறு பாடல்,

**"கள்ளி நீழல் கடவுள் வாழ்த்தி,**

**பசி படு மருங்குலை கசிபு" 7** என்று கூறுகிறது.

**நடுகல் வழிபட ஆற்றுப்படுத்துதல்**

சங்க இலக்கியங்களில் பாணர்கள், வீரர்களின் நடுகற்களைக் கண்டு வணங்கிச் செல்லுமாறு ஆற்றுப்படுத்திய நிகழ்வுகளையும் காண முடிகிறது.

**"பெருங்களிற்று அடியின் தோன்றும் ஒருகண்**

**இரும்பறை இரவல! சேறி ஆயின்**

**……………………………………………**

**வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்**

**கொல்புனற் சிறையின் விலங்கியோன்கல்லே". 8**

இப்பாடலில், தலைவன் ஒருவன் ஆநிரைகளை மீட்டு வரும்வழியில் ஆநிரைகளைக் கவர்ந்தவர்களின் அம்புகளால் தாக்கப்பட்டு உயிர் துறந்தான். அவனுக்கு நடுகல் வைக்கப்பட்டிருக்கிறது. அவ்வழியே செல்லும் பாணன் ஒருவனை நோக்கி, **'நீ அந்த நடுகல்லை வழிபட்டுச் செல்வாயாக'** என்று பாணனை ஆற்றுப்படுத்துவதாக இப்பாடல் அமைகிறது.

நடுகற்களுக்கு நாள்தோறும் தீபதூபம் காட்டிப் பூசை செய்யும் வழக்கமும் ஏற்பட்டது. நடுகல்லைச் சுற்றிலும் கல் அடுக்கி அதனைப் பதுக்கை ஆக்குவர். இந்த நடுகற்களுக்கு **'வல்லாண் பதுக்கைக் கடவுள்'** என்று பெயர். உடுக்கு அடிப்பர். தோப்பி என்னும் கள் வைத்துப் படைப்பர். நடுகல்லுக்கு விடியற்காலையில் நன்னீராட்டி நெய்விளக்கு ஏற்றிப் படையல் வைத்து வழிபட்டச் செய்தியினை புறநானூறு கூறுகிறது.

**"இல்லடுகல்லின் சில்குடிச் சீறூர்ப்**

**புடைநடு கல்லின் நாட்பலியூட்டி**

**நன்னீராட்டி நெய்நறை கொளீஇய". 9**

**தெய்வ வழிபாடு**

நடுகல் வழிபாட்டின் தொடர்ச்சியாக தெய்வ வழிபாடு (உருவ வழிபாடு) நிகழ்ந்தது. இது பின்னர் பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு என்று இரண்டு வகையாக பிரிந்தது.

ஒவ்வொரு திணைக்கும் ஒரு தெய்வத்தினை வைத்து வழிபடும் வழக்கம் இருந்ததை தொல்காப்பியர் கூறுகின்றார்.

**“மாயோன் மேய காடுறை உலகமும்,**
**சேயோன் மேய மைவரை உலகமும்,**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்,**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே”.10** இதனடிப்படையில் பண்டைய தமிழரிடத்தில் தெய்வ வழிபாடு அமைந்திருந்தது. இம்மரபு இன்றைய நிலையில் தெய்வங்களை வழிபடுவோரின் வாழ்க்கையிலிருந்து தொடங்குகிறது.

**“ஒரு சமூகம் அதன் உணவுத் தேவை, இருப்பிடத் தேவை ஆகிய புறத்தேவைகள் எந்த முறையில் அமைகிறதோ அதற்குத் தகுந்தவாறு சமுதாய அமைப்பை உருவாக்கிக் கொள்வதுடன், தெய்வ அமைப்பையும் ஏற்படுத்திக் கொள்கின்றன.” 11**

என்று நா. வானமாமலை (பழங்கதைகளும் பழமொழிகளும்) கூறுகிறார்.

**சங்க இலக்கியங்களில் மிகுதியாக காணப்பட்ட முக்கிய தெய்வ வழிபாடுகள்:**

சங்க இலக்கியங்களில் பெருந்தெய்வ வழிபாடாக முருகன் (சேயோன்), திருமால் (மாயோன்), சிவன் போன்ற தெய்வங்கள் வணங்கப்பட்டன. சிறுதெய்வ வழிபாடாக கொற்றவை வழிபாடு திகழ்ந்தது.

**பெருந்தெய்வ வழிபாடு**

**முருகன் (சேயோன்) வழிபாடு**

சங்க இலக்கியங்களில் **‘சேயோன்’** என்று போற்றப்படும் முருகன், குறிஞ்சி நில மக்களின் முதன்மைக் கடவுளாகக் கருதப்பட்டார். காதல் வயப்பட்ட தலைவியின் மேனி மாற்றத்தினைத் தீர்க்க வேலன் வெறியாட்டு என்ற நிகழ்ச்சியை நடத்தி முருகனை வழிபடுவர் என்பதை சங்க இலக்கியங்கள் நமக்கு மிகுதியாகக் காட்டுகின்றன. இதில் பத்துப்பாட்டான திருமுருகாற்றுப்படையும், பரிபாடலின் ஆறுபாடல்களும் முருகனைப் பற்றியே சிறப்பாக உணர்த்துகின்றன. முருகன் வழிபாடு பற்றி அகநானூறு குறிப்பிடும்போது ,

**“சூர்மருங்கு அறுத்த சுடரிலை நெடுவேல்**
**சினம்மிகு முருகன் தண்பரங்குன்றத்து”12**

என்ற வரிகளில் முருகன் தெய்வப் பண்புகளையன்றி, வீரப்பண்பு உடையவனாகத் திகழ்ந்திருக்கிறான் என்று குறிப்பிடுகின்றன.

**சிவன் வழிபாடு**

சங்க இலக்கியங்களில் சிவபெருமான் வழிபாடு மிகத் தொன்மையானதாகப் போற்றப்படுகிறது. சிவபெருமானுக்கு ஏழு நாள் விழா எடுக்கப்பட்ட செய்தி, மதுரைக்காஞ்சியில்,

**“கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி**
**ஆடுதுவன்று விழவின்” 13**

என்ற வரிகள் மூலம் அறியப்படுகிறது. சங்க காலத்தில் மதுரை மற்றும் பிற முக்கிய இடங்களில் சிவனுக்கான கோயில்கள் இருந்ததற்கான குறிப்புகள் உள்ளன.

**திருமால் வழிபாடு**

சங்க இலக்கியத்தில் வைணவ கூறுகள் விரவிக் கிடக்கின்றன. புறநானூற்றின் 174 வது பாடலில் திருமால் பற்றிய நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன.

**“அணங்குடை அவுணர் கணங்கொண்ட்டொளித்தெனச்**
**சேண் விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது.”14** என்ற பாடலில் அசுரர்கள் சூரியனை மறைத்தனர். சூரியனை காணாது இருள் உலகத்தாரின் துன்பம் தீர்ப்பதற்காக வலிமையுடைய திருமால் சூரியனை மீட்டு ஆகாயத்தில் நிறுத்தினார் என்று குறிப்பிடப்படுகிறது.

**சிறுதெய்வ வழிபாடு**

**கொற்றவை வழிபாடு**

சங்க இலக்கியத்தில் கொற்றவை வழிபாடு என்பது வெற்றியின் தெய்வமாக, போர்க்கடவுளாக, தாய்த்தெய்வமாக மக்களால் வழிபடப்பட்ட மிகப்பழமையான வழிபாட்டு முறையாகும். கொற்றவை காட்டில் உறையும் மறவர்களின் தெய்வமாக அறியப்படுகிறது. அகநானூறு இவளை, **“ஓங்குபுகழ் காணமர் செல்வி” 15** என்றும், குறுந்தொகை **“விறல்கெழு சூலி”16** என்றும் குறிப்பிடுகிறது.

**முடிவுரை**

பண்டையத் தமிழர்கள் இயற்கை வழிபாடு என்பதில் தொடங்கி, நடுகல் வழிபாடு என்ற உருவம் பொறிக்கப்பட்ட நிலையில் கடவுளாக வணங்கி, பின்பு கடவுளுக்கென்று உருவம் கொடுத்து, திணை வாரியாக கடவுளைப் பிரித்து வழிபட்டனர். இன்றைய சூழலில் உயிரினங்களைப் பலியிட்டு வழிபடும் தெய்வங்களை சிறுதெய்வங்களாகவும், மற்ற தெய்வங்கள் பெருந்தெய்வங்களாகவும் வழிபாடு செய்து வருகின்றனர். இவ்வாறு பண்டையத் தமிழரின் வழிபாடுகள் குறித்து இக்கட்டுரையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. பேராசிரியர் மு.சண்முகம்பிள்ளை, தொல்காப்பியம் (பொருளதிகாரம்), ப.184.
2. முனைவர். அ.தட்சிணாமூர்த்தி, ஐங்குறுநூறு மூலமும் உரையும், ப.535.
3. முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன், நற்றிணை,ப.149.
4. முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன், நற்றிணை,ப.556.
5. வே.சாமிநாதையர், சிலப்பதிகார மூலமும் அரும்பத உரையும், ப.33.
6. புலியூர்க்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், ப.323.
7. புலியூர்க்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், ப.264.
8. புலியூர்க்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், ப.267.
9. புலியூர்க்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், ப.317.
10. சி.கணேசையர், தொல்.பொருள்.முதல் பாகம், ப.16.
11. பேராசிரியர்.நா.வானமாமலை, பழங்கதைகளும் பழமொழிகளும், ப.80.
12. புலியூர்க்கேசிகன், அகநானூறு களிற்றுயானை நிரை, ப.116.
13. முனைவர்.வி.நாகராசன், பத்துப்பாட்டு, ப.16.
14. புலியூர்க்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், ப.189.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

15. புலியூர்க்கேசிகன், அகநானூறு மூலமும் உரையும், ப.106.

16. பேராசிரியர்.மு.சண்முகம்பிள்ளை, குறுந்தொகை, ப.195.

**துணைநூற்பட்டியல் (Works Cited)**

[1]. க. காந்தி. *தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்*. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2003.

[2]. க. கைலாசபதி. *பண்டையத் தமிழர் வாழ்வும் வழிபாடும்*. குமரன் புத்தக இல்லம், 1999.

[3]. வெ. கேசவராஜ். *தென்னிந்திய வீரக்கற்கள்*. மணி பதிப்பகம், 2008.

[4]. சு. தண்டபாணி. *சங்ககால மக்கள் வாழ்க்கை*. ஜெயலட்சுமி பப்ளிகேசன்ஸ், 2020.

[5]. க. த. திருநாவுக்கரசு. *தமிழ்ப் பண்பாடு*. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2009.

**இணைய முகவரி**

**1. www.thinnai.com, 18 Dec, 2011.**

**2.** https://www.tamilvu.org**, 03 Dec, 2004.**

**3. https://ta.wikipedia.org, 01 November, 2012.**

**4.** https://telibrary.com**, 09 June, 2010.**